## தமிழ்நாட்டு கிராமப்புற மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் 'TEALS' திட்டம்!

# 'மைக்ரோ சாஃப்ட்' நிறுவனத்துடன் - தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை ஒப்பந்தம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில்!



**வாஷிங்டன், ஜூலை 8 -**

**தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்களுக்கு அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த புரிதலும் சென்றடைய தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் 'TEALS' திட்டத்தின்கீழ் - இந்தியாவிலேயே முதன் முறையாக கல்வி மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, உலகப் புகழ் வாய்ந்த 'மைக்ரோ சாஃப்ட்' நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ளது.**

**தமது (பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்) முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்தியாவிலேயே முதன்முறையாக கல்வி மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மேற்கொண்டுள்ளது.

TEALS(Tecnical Education And Learning Support) எனும் திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. தமிழ்நாட்டின் கிராம பகுதிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்களுக்கு அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த புரிதலும் சென்றடைய TEALS திட்டம் செயல்படுத்தப்படும்.

முதலமைச்சர் அவர்கள் வானவில் மன்றம் திட்டத்தின் வாயிலாக STEM முயற்சியை தொடங்கி வைத்தார்கள். மாணவர்களின் கண்டுபிடிப்பு திறனை ஊக்குவிக்கும் விதமாக 710 கருத்தாளர்களின் உதவியோடு மாணவர்களின் அறிவியல் திறன்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடுத்த கட்டமாக Robotics, Artificial Intelligence, Machin learning போன்ற தொழில்நுட்பங்கள் நமது கிராமப்புற மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் எனும் நோக்கில் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து வரலாற்று சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

TEALS எனும் திட்டத்தை மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து தங்கள் மாநிலங்களில் செயல்படுத்த வேண்டுமென இந்தியாவில் உள்ள பல மாநிலங்களும் போட்டியிட்டன! ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்த ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும் தமிழ்நாடு மாநிலம் முதன்முறையாக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

நவீன தமிழ்நாட்டின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் இது போன்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தமிழர்களாகிய நமக்கு கிடைத்த பெருமையாகும்.

முதல்கட்டமாக 13 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 3800 மாணவர்கள் பயன்பெறும் வகையில் TEALS திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

மிக விரைவில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மைக்ரோசாப்ட் இயக்குனர்கள் பங்குபெறும் TEALS திட்டத் தொடக்க விழா தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கின்றது. இத்திட்டம் அனைவராலும் பாராட்டப்படும் என மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

இதற்கு உறுதுணையாக விளங்கிய மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான சிசில் சுந்தர்((Director Data & AI), தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை முதன்மை செயலாளர் திருமதி. காகர்லா உஷா சுதன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.

இவ்வாறு, தமது அறிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.



சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று, அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## உ.பி. - குஜராத்துக்கு ரயில் திட்டங்களில் முன்னுரிமை!

# நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுக்கு மோடி அரசு அநீதி!

### தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி குற்றச்சாட்டு



சென்னை, ஜூலை 8 -

வட மாநிலங்களுக்கு சாதகம், தென் மாநிலங்களுக்கு பாதகம் என்று செயல்படும் ஒன்றிய பா.ஜ. அரசின் பாரபட்ச நடவடிக்கை, தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் என்று கே.எஸ்.அழகிரி எச்சரித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்; சரக்கு போக்குவரத்திற்காக உத்தரபிரதேசம், அரியானா, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் ஆகிய 9 மாநிலங்கள் வழியாக 3381 கி.மீ. தனி சரக்கு ரயில் பாதை அமைக்கும் திட்டத்தை 2014ல் ஆட்சிக்கு வந்ததும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்கியது. அதில், நிறைவு பெற்றுள்ள 2079 கி.மீ. தனி ரயில் பாதையை பிரதமர் மோடி நாளை தொடங்கி வைக்கிறார்.

கடந்த 9 ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் தெற்கு ரயில்வே தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசால் அறிவிக்கப்பட்ட சென்னைமகாபாலிபுரம்கடலூர், திண்டிவனம், செஞ்சிநகரி, திண்டிவனம்,திருவண்ணாமலை, தூத்துக்குடி, அருப்புக்கோட்டை,மதுரை ஆகிய ரயில் திட்டங்களுக்கு கடந்த 9 ஆண்டுகளாக எந்தவிதமான ஆய்வோ, நிதி ஒதுக்கீடோ செய்யாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இதைவிட ஒரு அநீதியை பா.ஜ.க. அரசு தமிழகத்திற்கு இழைக்க முடியாது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 9.22 சதவிகிதம். பிரதமர் மோடியை பொறுத்தவரை உத்தரபிரதேசத்திற்கும், குஜராத் மாநிலத்திற்கும் காட்டுகிற அக்கறையை தென் மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டுக்கு காட்டுவதில்லை. இத்தகைய போக்கு நீடிக்குமே யானால் வட மாநிலங்களுக்கு சாதகமாகவும், தென் மாநிலங்களுக்கு பாதகமாகவும் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டு வலிமை பெற்று தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்க நேரிடும் என எச்சரிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

## ரவீந்திரநாத் வெற்றி செல்லாது! உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

# காலம் தாழ்த்தி நீதி வென்றுள்ளது!

### ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேட்டி



தேனி, ஜூலை 8-

தேனி நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத் வெற்றி பெற்றது செல்லாது என உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

இந்நிலையில், அங்கு அவரை எதிர்த்து போட்டியிட்டு 2ஆம் இடம் பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் எம்.எல்.ஏ. ஈரோட்டில் நேற்று அளித்த பேட்டி வருமாறு: தேனி தொகுதி எம்.பி.யாக ரவீந்திர நாத் வெற்றி பெற்றது செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. நாட்டில் தர்மமும், நியாயமும் இன்னும் இருக்கிறது என்பதை காட்டும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்திருக்கிறது. தேர்தல் நேரத்தின் போது பல முறைகேடுகள் நடந்தன.

முறைகேடுகளை எல்லாம் அப்போதைய தேர்தல் அதிகாரியான கலெக்டரிடம் பல புகார்களாக கொடுக்கப்பட்டது. ஆனால், நாங்கள் கொடுத்த எந்த புகார் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல். முழுக்க முழுக்க ஓ.பன்னீர்செல்வத்திற்கு ஆதரவாக செயல்பட்ட காரணத்தால் தான் தேர்தலில் எனக்கு தோல்வியாக அமைந்தது. காலம் தாழ்த்தியும் தர்மமும், நீதியும் வென்றுள்ளது. வழக்கை தொடர்ந்தவருக்கு எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.


